**ஜூலை - 11**

**"தேவனால் ஜெநிப்பிக்கப்பட்ட எவனும் பாவஞ்செய்யான்… தன்னைக்காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்." - 1யோவா 5 : 18.**

இருதயம் (மனது, சித்தம்) பரிசுத்தமாயும், தேவனோடும், நீதியோடும் இணக்கமாகவும் இருக்கும்வரை அதாவது நமது ஜெநிப்பித்தலின் வித்து, பரிசுத்தத்தின் ஆவி, நம்மில் தொடர்ந்து இருக்கும் வரை, அந்தப் புது மனது பாவத்தை அங்கீகரிக்க முடியாது. ஆனால், அதன் எதிரியாக இருக்க வேண்டும். எதிரியாகவே இருக்கும். நம்முடைய போர்களில் அநேகம் நம்முடைய விழுந்துபோனதும், பலவீனமானதுமான மனித சுபாவத்தின் அங்கங்களோடும் அவைகளின் ஆசைகளோடும் விருப்பங்களோடும் இருந்தாலும், "புதுச்சிருஷ்டியாக" நாம் தனிப்பட்டவர்களாகவும், மாம்சத்திலிருந்து வேறுபட்டவர்களாகவும் இருக்கிறோம். மாம்சத்தின் பலவீனங்களும், குறைகளும் கிறிஸ்து யேசுவிலிருக்கிற புதுசிருஷ்டிக்குச் சாட்டப்படுகிறதில்லை. ஆனால் நமது கர்த்தருடைய மீட்பின் பலியின் புண்ணியங்களின் பாதுகாப்பின் கீழ் மூடப்பட்டதாகவும், மறைக்கப்பட்டதாகவும் எண்ணப்படுகின்றன. **- Z ’99, 58 (R 2438)**

புது சிருஷ்டி தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறது. அது தேவனுடைய சித்தத்தை விரும்புகிறதில் ஒவ்வொரு உறுப்பும் ஒத்துழைக்க சாத்தியமாக்குகிற நமது மூளையின் ஒவ்வொரு உறுப்பிலுமுள்ள ஒரு ஆவிக்குரிய விசேஷத்தன்மையாகும். ஆகையால், தேவனுடைய சித்தத்தை விரும்பவும் செய்யவுமுள்ள மனோசக்தியைக் கொண்ட புதுசிருஷ்டி ஒருபோதும் பாவம் செய்கிறதில்லை. நம்முடைய எல்லா எண்ணங்களையும், நோக்கங்களையும் வார்த்தைகளையும் தேவனுடைய சித்தத்துக்கு உட்படுத்தப் புதுசிருஷ்டி அவைகள் மேல் காவல் புரிகிறது. இது தேவனால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒருவரை எதிராளி கெடுத்து விடுவதிலிருந்து தடுக்கிறது. **- P ’35, 102.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யோவா 1:13; 3:3-5; யாக் 1:18; 1பேது 1:5,23; ரோம 7:17; யூதா 20,21,24,25; லூக் 22:31,32; ரோம 16:20; 2கொரி 4:4; 11:3; யோவா 8:44; 1யோவா 2:13,14.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 237 (R 5742).**

**வினாக்கள் : இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்தவார அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதன் பலன் என்ன?**